2020 மார்ச் 18] [திரு. எஸ்.பி. வேலுமணி]

இத்திட்டத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதியாதாரம் மூலதன மானிய நிதிமூலம் பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணியாணை 10–9–2019 அன்று வழங்கப்பட்டது. இப்பாலம் அமைப்பதற்குத் தேவையான நிலத்தை ICF நிறுவனத்திடமிருந்து குத்தகை அடிப்படையில் பெறுவதற்கு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரே புள்ளிவிவரங்களையெல்லாம் குறிப்பிட்டார்கள். பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் 10 கோடியே 75 இலட்சம் ரூபாயை ICF நிறுவனத்திற்குச் செலுத்துவதாக இருந்தது. பின்னர், சுற்றுச்சுவர் வெளிப்புறம் மற்றும் உள்ளே ICF–ன் நிலத்தையும் பயன்படுத்துவது போன்ற காரணத்தால், 15 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலுத்துமாறு ICF நிறுவனம் கேட்டுக்கொண்டது. இத்தொகையை ICF நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தனி அலுவலர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புகை கடிதமும் ICF நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையைச் செலுத்த இரயில்வே வாரியம் மற்றும் ICF நிறுவனத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. கொளத்தூர் பிரதான சாலையில் ஆழ்துளை கடைக்கால்மீது பளுதாங்கும் சோதனை நடத்துவதற்கு ஏதுவாக ஆழ்துளை கடைக்கால் அமைக்கும் பணியும், ICF சாலை பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியும் தற்போது நடைபெற்று வருகிறது. இப்பாலப் பணி 18 மாத காலத்தில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இதற்கு முன்பும் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய கோரிக்கையை வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னதால், அன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியவுடன், நான் மாநகராட்சி ஆணையாளரைக் கூப்பிட்டு, உடனடியாகப் பணிகள் வேகமாக நடக்க வேண்டுமென்று உத்தரவிட்டேன். அந்த அடிப்படையிலே இன்றைக்கு இரயில்வே துறையிலிருந்து அந்தக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது. கூடிய விரைவிலே வேகமாக அந்தப் பணி முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

[2020 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார் இந்த அவையிலே பேசி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் விரிவான பதிலைச் சொல்லிவிட்டார். ஆகவே, திரும்பவும் அதைப் பேச நான் அனுமதிக்க வேண்டுமென்று நீங்கள் கேட்பது முறையல்ல. அதனால் அதை எடுத்துக்கொள்ள முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு)

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் ஒருவருக்கே வாய்ப்புத் தர முடியாது. உட்காருங்கள். திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் நகராட்சியிலே 6,000 புதிய குடிநீர் இணைப்புகள் கொடுப்பதாக, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதுதான் கொண்டு வந்து கொடுத்தீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். உட்காருங்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நான் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். காலையில் கொண்டு வந்து அவை நடக்கும்போது கொடுத்துவிட்டு உடனே எழுப்பினால் எப்படி? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Philippines–லே நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் Corona virus பீதி காரணமாக, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இதையெல்லாம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் இதையெல்லாம், . . .

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

2020 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைவரும் கேட்டிருக்கிறீர்கள். அது மாண்புமிகு அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள், ஆஸ்டினேதான் பேச வேண்டுமென்று எதிர்பார்த்தீர்களென்றால், அது முடியாது. நேற்றைக்கு திரு. ராஜேஷ் குமார், விரிவாக மானியக் கோரிக்கையிலே பேசி, அதற்கு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் விரிவாக, ஏறக்குறைய 10 நிமிட நேரத்தை அதற்காகச் செலவழித்துப் பேசியிருக்கிறார். விளக்கம் தெரிவித்திருக்கிறார். திரும்பவும் நீங்கள் அதை இந்த அவையிலே எழுப்ப வேண்டுமென்று விரும்புவது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11–20

3. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

(இ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

(அ) கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்